https://puthusudar.lk/ puthusudar / புதுசுடர்

# புது சுடர்

உண்மைக்கே முதலிடம்

17th DECEMBER 2023 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 58



# பாதாள - போதை ஒழிப்பு:

# நாடு பூராகவும் கடும் நடவடிக்கை

போதைப் பொருள் வியாபாரம் மற்றும் பாதாள குழுக்களை ஒழிப்பதற்காக பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனின் தலைமையில் நாடு பூராகவும் இன்று முதல் கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பிரதி பொலிஸ்மா அதிபர்கள்- பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் ,விசேட அதிரடிப்படையினர் மற்றும் புலனாய்வு பிரிவினர் என தரப்பட்டவர்கள் இதற்காக களத்தில் இறங்குகின்றனர்.

போதை பொருள் வியாபாரிகளுக்கு பொலிஸ்மா அதிபர் கடுமையான எச்சரிக்கையை விடுத்துள்ளார். அவர்கள் இந்த வர்த்தகத்தை விட்டு குடும்பத்தோடு நல்லமுறையில் சேர்ந்து வாழுமாறு கேட்டுள்ளார்.

## நாட்டை விட்டுப் பாய்ந்த 88 பாதாள உறுப்பினர்களை பிடிக்க நடவடிக்கை

நாட்டை விட்டுப் பாய்ந்துள்ள 88 பாதாள உறுப்பினர்களை பிடிப்பதற்கு இலங்கை அரசு சர்வதேச பொலிஸான இன்டர்போலின் உதவியை நாடியுள்ளது.அதற்காக இன்டெர்போலால் நீல அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் வியாபாரிகள்,ஒப்பந்த அடிப்படையிலான கொலையாளிகள் ,கப்பம் கோருபவர்கள் என பலதரப்பட்ட குற்றவாளிகள் இதற்குள் அடங்குகின்றனர்.



## ஊழல் ,மோசடிகள் மூலம் சொத்துக்கள் சேர்ப்பு

### 3255 முறைப்பாடுகள்

ஊழல்,மோசடிகள் மூலம் சொத்துக்கள் ஈற்றியமை தொடர்பில் லஞ்ச,ஊழல் ஆணைக்குழுவுக்கு 3225 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவை இந்த வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் நவம்பர் 21ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் கிடைத்த முறைப்பாடுகளாகும் ஆணைக்குழு வட்டாரம் தெரிவிக்கிறது.

இருந்தும் ,இவை சிறு சிறு முறைப்பாடுகள்தான் என்றும் பில்லியன் கணக்கிலான ஊழல்,மோசடிகள் எவையும் முறைப்பாடுகள் செய்யப்படவில்லை என்றும் அந்த வட்டாரம் மேலும் தெரிவிக்கிறது.



புதுசுடர்
www.puthusudar.lk
2023 DECEMBER 17 - SUNDAY

# எப்போது முடியும் இந்த அவலம்?

இப்போது அரசியல் அரங்கில் அதிகம் பேசப்படும் விடயம் வரவுசெலவு திட்டம்தான்.

மக்கள் என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறத் தொடங்கியுள்ளனர்.

முடிவே இல்லாமல் விலையேற்றத்தைத் தவிர வேறு எந்த மாற்றமும் நிகழ்வதாக இல்லை.

பணக்காரர்களால்கூட வாழமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஏழைகளின் நிலைபற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

மக்கள் எந்தப் பக்கமும் நகர முடியாமல் இறுகிப்போய் நிற்கிறார்கள். தீர்வு என்ற கதைக்கே இடமில்லை. அரசாங்கம் அரசாங்கத்தின் பிரச்சினைக்கான தீர்வை மட்டும்தான் முன்வைக்கிறது. மக்களின் பிரச்னைக்கு எந்தத் தீர்வும் கிடையாது.

புதிய ஜனாதிபதியால் இந்த நாட்டுக்கு-நட்டு மக்களின் பிரச்சினைக்கு முன்வைக்கப்பட்ட தீர்வு என்ன? இவர் பதவி ஏற்றதால் மக்கள் அடைந்த நன்மை என்ன?

கோத்தா இருக்கும்போது என்ன நடந்ததோ அதுதான் இப்போதும் நடக்கிறது.

அதைவிட மோசமாக நடக்கிறது. போனவரும் அப்படியே வந்தவரும் அப்படியே.

எரிபொருள் வரிசை இல்லாமலாக்கப்பட்டமைதான் மக்களின் பிரச்சனைக்கான சரியான தீர்வு என்பதுபோலவும் அதைச் செய்தது பெரிய சாதனைப்போலவும் கூறிக்கொண்டு திரிகிறது இந்த அரசு.

மக்கள் வீதிக்கு இறங்கி போராடி கோத்தாவை விரட்டியடித்து பெற்றுக்கொண்ட நன்மை என்ன?

எதுவும் இல்லை.மாறாக மேலும் பிரச்சினையைத் தேடிக்கொண்டார்கள் என்றே சொல்ல வேண்டும்.

கோத்தாவை விரட்டிய மக்கள் ரணிலைக் கண்டதும் அப்படியே போராட்டத்தை நிறுத்திக்கொண்டனர்.

அவர் அனுபசாலி-திறமைசாலிசர் வதேச தொடர்புடையவர் என்ற மாயைக்குள் மக்கள் சிக்கி ஏமாந்துபோனார்கள்.

அவரது சர்வதேச தொடர்பால் எதுவும் நடக்கவில்லை. ஒரு உதவியும் கிடைக்கவில்லை.

கோத்தாவை விட்டிருந்தால் என்ன நடந்திருக்குமோ அதுதான் இப்போது நடக்கிறது.

மிகவும் சூட்சுமமான முறையில் தங்களை பாதுகாத்துக்கொள்வதற்காக ரணிலை ஜனாதிபதியாக்கி வெற்றிகண்டுள்ளது இந்த அரசு.

மக்களின் போராட்டம் வீணாகவே போயுள்ளது.

ராஜபக்ஸ குடும்பத்தைப் பாதுகாக்க வந்தவர் எப்படி மக்களை பாதுகாப்பார்? எப்படி மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பார்?

மீண்டும் தான் எப்படி ஜனாதிபதியாக முடியும் என்பதுபற்றித்தான் ரணில் சிந்திக்கிறாரே தவிர எப்படி மக்களின் பிரச்சினைக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைப்பது என்பதுபற்றி சிந்திப்பதாக இல்லை.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைத்துவிட்டு ஜனாதிபதி தேர்தலை நடத்துவதுபற்றித்தான் ரணில் யோசிக்கிறார்.13 ஆவது திருத்தச் சட்டத்தை-அதிகாரப்பகிர்வை வழங்கப்போவதாகக் கூறிக்கொண்டு அதனூடாக வடக்கு-கிழக்கு தமிழர்களின் வாக்குகளை அபகரித்து ஜனாதிபதியாகும் திட்டத்தில்தான் ரணில் உள்ளார்.

கோத்தா இருக்கும்போது இருந்த நிலைமையைவிட நிலைமை இப்போது மோசமாகவே உள்ளது. அவர் பதவியை விட்டு ஓடும்போது இருந்த பொருட்களின் விலைகள் அல்ல இப்போது இருப்பது.பல மடங்குகள் அதிகரித்துவிட்டன.

தற்போதைய மின்கட்டண அதிகரிப்பால் மக்கள் மேலும் சிக்கலுக்குள் வீழ்ந்திருக்கின்றனர். மின்கட்டணத்தை செலுத்துவதற்காக தனியாக உழைக்க வேண்டிய கட்டத்தில் மக்கள் இருக்கின்றனர்.

மின்கட்டணமும் அதிகரித்து அந்த அதிகரிப்பால் பொருட்களின் விலைகளும் அதிகரிக்கின்றபோது மக்களின் நிலைமை மிக மிக மோசமாக மாறும். மக்கள் மீண்டும் ஒரு போராட்டத்துக்குச் செல்வதற்கு இந்த நிலைமை உந்து சக்தியாக மாறும் என்றே தெரிகிறது.

இந்த நிலையில் 2024 இற்கான வரவு-செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதிலும் எதுவுமில்லை. இந்த ஆட்சி முடிவுக்கு வரும்வரை இப்படித்தான் தொடரப்போகிறது நிலைமை.

## மாகாண மட்ட கைப்பந்தாட்ட போட்டியில் கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி பிரகாசிப்பு



(எம்.எம்.ஜெஸ்மின்)

இலங்கை பாடசாலைகள் கைப்பந்தாட்ட (handball) சம்மேளனம் கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையில் கைப்பந்தாட்டத்தை பாடசாலை மாணவர்கள் மத்தியில் பிரபல்யப் படுத்தும் வகையில் 22 வயதிற்குட்பட்ட ஆண்,பெண் இருபாலாருக்குமாக ஒழுங்கு செய்திருந்த போட்டி நிகழ்வு மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியிலும், மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதான உள்ளக அரங்கிலும் இடம்பெற்றன.

இதில் கலந்து கொண்ட கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி மாணவர்கள் இடம்பெற்ற 6 போட்டிகளில் வெற்றியையும்,இரண்டு போட்டிகளில் தோல்வியையும், ஒரு போட்டியில் வெற்றி தோல்வியற்ற நிலையையும் அடைந்தனர்.

ரிதிதென்ன இக்ரா வித்தியாலயம், வவுணத்தீவு பரமேஸ்வரா வித்தியாலயம், பூனொச்சிமுனை இக்ரா வித்தியாலயம், மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரி, கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி, நாவற்காடு நாமகள் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் அறிமுக போட்டிகளில் பங்கேற்றன.







**கேள்வி: ஜனாதிபதி தேர்தலுக்குச் சென்றால் ஜேவிபியின் நிலை என்னவாக அமையும்?**

**கேள்வி: ரணில் விக்கிரமசிங்க ஏதாவது சட்ட ஏற்பாடு செய்து ஜனாதிபதி தேர்தலை ஒத்திப்போடமாட்டாரா?**

**கேள்வி: இந்த முறையும் ரணில் போட்டியிடமாட்டாரோ?**

**கேள்வி: ரணில் குறுக்கு வழியில் சென்று அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கமாட்டாரா?**

**கேள்வி: நாடாளுமன்றத் தேர்தலில் உங்களால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வெல்ல முடியுமா?**

**கேள்வி: அமைச்சர் பந்துல குணவர்தன கூறுகிறார் பொருளாதாரத்தை சரி செய்வதாகக் கூறி நாட்டை யாரவது பாரமேற்றால் அவரால் இரண்டு வாரங்களுக்கு மட்டுமே நாட்டைக் கொண்டு நடத்த முடியும் என்று.உங்களின் கருத்து?**

# அனுரதான் அடுத்த ஜனாதிபதி..!

இவ்வாறான பல கேள்விகளுக்கு பதில் வழங்கினார் ஜேவிபியின் முன்னாள் எம்பி சுனில் ஹந்துன்நெத்தி.அவர் வழங்கிய பேட்டி கீழே தரப்பட்டுள்ளது.

**கேள்வி : ஜனாதிபதி தேர்தலுக்குச் சென்றால் ஜேவிபியின் நிலை என்னவாக அமையும்?**

பதில் :ஜேவிபி இப்போது பல கட்சிகளுடனும் அமைப்புகளுடனும் இணைந்து தேசிய மக்கள் சக்தியாக செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது.

2019 இல் 3 வீத செல்வாக்குத்தான் ஜேவிபிக்கு இருந்தது.அதே 3 வீதம் இப்போதும் இருந்திருந்தால் ஜனாதிபதி உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திப்போட்டிருக்கமாட்டார்.

ஜனாதிபதி தேர்தல் இப்போது வந்தால் நிச்சயம் அனுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாவார்.நாடாளுமன்றத் தேர்தலை நடத்தினாலும் வெல்வோம்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தாமல் விட்டதுபோல் ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமல் விட முடியாது.

**கேள்வி : ரணில் விக்கிரமசிங்க ஏதாவது சட்ட ஏற்பாடு செய்து ஜனாதிபதி தேர்தலை ஒத்திப்போடமாட்டாரா?**

பதில் : ரணில்பற்றி ஒரு மாயை இருக்கிறது.அவர் ஒரு நரி.கடும் அறிவாளி. பொருளாதார நிபுணர் என்றெல்லாம் சிலர் எண்ணிக்கொண்டு இருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட ரணில் எத்தனையோ ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கி இருக்கிறார்.2010,2015,2020 ஆகிய வருடங்களில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் அவர் போட்டியிடவில்லை.

அவர் திறமையானவர் என்றால்–அவருக்கு பயமில்லை என்றால் மக்களிடம் சென்று வாக்கு கேட்டிருப்பார் அல்லவா.

**கேள்வி : அப்போ இந்த முறையும் அவர் போட்டியிடமாட்டாரோ?**

பதில் : அவருக்கு இப்போது இருக்கின்ற ஒரே வழி மொட்டு கட்சியில் தொங்குவதுதான்.மொட்டில் போட்டியிடக்கூடிய ஒரு சிறந்த வேட்பாளர் இப்போது இல்லை.

அதனால்,நாடாளுமன்றத் தேர்தலுக்குச் செல்வதற்கே மொட்டு கட்சிக்கு விருப்பம். ஜனாதிபதி தேர்தலுக்கு முன் ஜனாதிபதியால் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த முடியும்.

ஐக்கிய மக்கள் சக்தியிலும் வேட்பாளர் பிரச்சினை உண்டு.சஜித் பிரேமதாசா பிரபல்யமான தலைவர் அல்ல.இதனால் அவர்களும் ஜனாதிபதித் தேர்தலைத் தவிர்க்கவே விரும்புகிறார்கள்.

ஆனால்,நாடாளுமன்றத்தை இப்போது கலைப்பதற்கு 80 விதமான எம்பிக்கள் கையை உயர்த்தமாட்டார்கள்.காரணம் அடுத்த தேர்தலில் அவர்களால் வெல்ல முடியாது என்பதால்.

ரணிலுக்கு விருப்பம் ஜனாதிபதி தேர்தலை நடத்தாமல் இருப்பதற்குத்தான். ஆனால்,அரச,அரசமைப்பின்படி அது முடியாது.அதனால் தேர்தல் நிச்சயம் நடக்கும்.

**கேள்வி : ரணில் குறுக்கு வழியில் சென்று அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கமாட்டாரா?**

பதில் : இன்னும் 30 வாரங்கள்தான் உள்ளன.அதற்குள் அவர் எதையும் செய்ய முடியாது.ஐக்கிய தேசிய கட்சியும் மொட்டு கட்சியும் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்து நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டும்.

இல்லாவிட்டால் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறையை இல்லாதொழிக்க வேண்டும்.அதைச் செய்வதற்காக அரசமைப்பில் திருத்தும் கொண்டு வந்து–சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி–நீதிமன்றம் சென்று என பல வேலைகள் செய்ய வேண்டும்.அதற்குள் ஜனாதிபதி தேர்தல் வந்துவிடும்.

ஆகவே, அவரது ஜில்மாட் வேலைகளை நடத்துவதற்கு காலம் போதாது.

**கேள்வி : நாடாளுமன்றத் தேர்தலில் உங்களால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வெல்ல முடியுமா?**

பதில் : ஜனாதிபதி தேர்தலின் பின் நாடாளுமன்றத்தை தேர்தல் வந்தால் நாட்டைக் கட்டி எழுப்பக்கூடிய பலமான அதிகாரத்தை நாம் மக்களின் கேட்போம்.

தேர்தலில் நாம் யாருடனும் கூட்டணி சேரமாட்டோம்.அதற்கான தேவை இல்லை.மக்கள் எம்முடன் இருக்கிறார்கள். மக்களுக்கு இந்த அரசியல் முறைமை வெறுத்துப்போயுள்ளதை.

இந்த ஊழல், மோசடிக்காரர்களை விரட்டுவதற்காக மக்கள் தேர்தலை எதிர்பார்த்து இருக்கிறார்கள்.

இரண்டு வருடங்களுக்கு முன் எம்முடன் இணையாத பலர் இப்போது எம்முடன் இணைந்திருக்கிறார்கள். படையினர்,ஓய்வுபெற்ற படை அதிகாரிகள்,வெளிநாடுகளில் உள்ளவர்கள் என பல தரப்பினர் எம்முடன் இணைந்துள்ளனர்.

இலங்கை பூராகவும் தொகுதி மற்றும் மாவட்ட கூட்டங்களை நடத்தி வருகிறோம்.எல்லா இடங்களிலும் மக்கள் செல்வாக்கு அதிகரித்துச் செல்வதை அவதானிக்க முடிகிறது.

28 நாடுகளில் நாம் அமைப்புகளை நிறுவியுள்ளோம்.






**கேள்வி :அமைச்சர் பந்துல குணவர்தன கூறுகிறார் பொருளாதாரத்தை சரி செய்வதாகக் கூறி நாட்டை யாரவது பாரமேற்றால் அவரால் இரண்டு வாரங்களுக்கு மட்டுமே நாட்டைக் கொண்டு நடத்த முடியும் என்று.உங்களின் கருத்து ?**

பதில் : அரசால் முடியாது என்பதை அவர் ஒத்துக்கொண்டுள்ளார்.இந்த நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமென்றால் சமூகத்தை ஒன்றுசேர்க்க வேண்டும்.

அனுரகுமார ஜனாதிபதியானாலும்கூட,மக்களை ஒன்றுசேர்க்காவிட்டால் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது.

நாம் மக்களிடம் கேட்பது முதலில் எங்களிடம் அதிகாரத்தைத் தந்து பாருங்கள் என்று.எந்தவொரு பொருளாதாரத் திட்டத்தைக் கொண்டு வந்தாலும் திருட்டு ,ஊழல்,மோசடியை ஒழிக்காமல் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது.

இந்த ஆட்சியாளர்கள் திருடர்களை பிடிக்கவோ தண்டிக்கவோமாட்டார்கள்.ரணில் மஹிந்தவைத் தண்டிக்கமாட்டார்.மஹிந்த ரணிலைத் தண்டிக்கமாட்டார்.அவர்கள் எல்லோரும் நண்பர்கள்.

இவர்கள் மாறி மாறி ஆட்சிக்கு வந்தால் திருட்டுக்கள் கூடுமே தவிர குறையாது. பொருளாதாரத்தை முன்னேற்ற முடியாது.–என்றார்.



# மஹிந்தவின் வாகனத்துக்கு அடி

,மஹிந்தவின் பிறந்த தினத்தையொட்டி குருநாகல்,அனுராதபுரம் உள்ளிட்ட பல இடங்களில் பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

குருநாகலில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்துகொள்வதற்காக மஹிந்தவும் ஜோன்சன் பெர்னாண்டோவும் வாகனத்தில் சென்றுகொண்டிந்தனர்.

அதிவேக பாதையில் சென்றுகொண்டிந்தபோது யக்ககஹபிட்டிய சந்தியில் வைத்து மாறுவதற்கு தாயாராகும்போது அந்த இடத்தில் உள்ள கட்டுப்பாட்டாளரால் இயக்கப்படும் வீதித்தடை கம்பு மஹிந்தவின் வாகனத்தில் பட்டுவிட்டது.

சத்தம் கேட்டு முன்பாக சென்ற பாதுகாப்பது அதிகாரிகள் வாகனத்தில் இருந்து இறங்கி ஓடிவந்து பார்த்தனர்.

வாகனத்துக்கு பெரிய சேதமில்லை.சிறிய சேதம்தாம்.

நடந்தது இதுதான்.

கட்டுப்பாட்டாளர் அவரது அறைக்குள் இருந்து அந்த வாகனத்தைப் பார்த்தார்.அப்போது அதற்குள் மஹிந்த இருப்பதைக் கண்டு உணர்ச்சிவசப்பட்டுவிட்டார்.

மரியாதைக்காக வேகமாக எழுந்து நின்றபோது அந்த வீதித் தடையை இயக்கம் பட்டனை அவர் அறியாமல் வேகமாக அழுத்திவிட்டார்.

இதனால்தான் அந்தத் தடி மஹிந்தவின் காரில் வேகமாகப் பட்டது.

இதை அந்தக் கட்டுப்பாட்டாளர் மஹிந்தவிடம் கூறி மன்னிப்புக் கேட்டார்.மஹிந்தவும் ஜோன்சனும் சிரித்துக்கொண்டு பரவாயில்லை என்று கூறினர்.

# சொல்ல முடியாத ரகசியம்



நாடாளுமன்ற உறுப்பினர்களான கீதா குமாரசிங்க,நிமால் லான்சா,நலின் பெர்னாண்டோ,நிமால் பியதிஸ்ஸ,ஜே.சி.அளவத்துகொட மற்றும் முஹம்மட் முஸம்மில் உள்ளிட்டவர்கள் நாடாளுமன்ற லொபியில் பல சுவாரசியமான விடயங்களை பேசிக்கொண்டிருந்தார்கள்.

கீதாவும் உடன் இருந்ததால்-அவர் ஒரு சினிமா நடிகை என்பதால் சினிமாவுக்கு மாறியது அவர்களின் பேச்சு.

அப்போது சினிமா பற்றிய பல ரகசியங்களை கூறினார் கீதா.அவை வெளியில் சொல்ல முடியாத ரகசியங்களாம்.

என்ன ரகசியம்.அந்த ரகசியமாகத்தான் .. இருக்கும்..அதுதான்..அது...

## துப்பறிவாளன்



# ரணிலை இப்படித்தான் அழைப்பேன்

2015 ஜனாதிபதி தேர்தல் இடம்பெறுவதற்கு முதல் நாள் அப்போதைய பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன,ரணில் விக்ரமசிங்க,ராஜித சேனாரத்ன உள்ளிட்ட சிலர் ஓரிடத்தில் சந்தித்துப் பேசினர்.

அப்போது மைத்திரி கூறினார்.நான் ஜனாதிபதியானால் ரணிலை பிரதமராக்கி அவரை சேர் என்றே அழைப்பேன் என்று.

கூட்டம் முடிந்து வெளியே வரும்போது மைத்திரியிடம் சென்ற ராஜித ஆப்படிச் செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்..

உலகில் எந்த நாட்டிலாவது ஜனாதிபதி அவருக்கு கீழ் உள்ளவரை சேர் என்று அழைப்பார்களா? உங்களை ஒருமாதிரியாக நினைப்பார்கள் என்று ராஜித கூறினார்.



# இப்படியான வேலையெல்லாம் செய்யமாட்டேன்

நாடாளுமன்ற எம்பிக்கள் உணவகத்தில் டலஸ் அழகப்பெரும,கெஹலிய ரம்புக்வல மற்றும் சரித ஹேரத் ஆகியோர் உரையாற்றிக்கொண்டு இருந்தனர்.

அப்போது அந்த வழியால் நிமால் லான்சா வந்துகொண்டிருந்தார்.அவரைக் கண்ட அழகப்பெரும

"நிமால் பியதிஸ்ஸ எம்பி ரொஷான் ரணசிங்கட வாகன கேச பார்லிமெண்டுல இழுத்தற்கு நீங்கதான் காரணம் என.. நீங்கதான் பேச சொன்னாயாம் அப்டி என.." என்று கேட்டார்..

"ச்சீ..ச்சீ..அதுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்ல.நான் இந்தமாதிரி வேலையெல்லாம் பாக்கமாட்டேன்."" என்றார் நிமால் லான்சா...



# அவருக்கு கிடைத்தது இவருக்கு இல்லை

எதிர்வருகின்ற ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டு ஆட்சியைப் பிடிக்கும் நோக்கில் ஜேவிபி உலகம் போராகவும் சென்று கூட்டங்களை நடத்தி வருகிறது.

அதன் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க பல நாடுகளுக்குச் சென்று கூட்டங்களை நடத்தி வருகிறார்.

அண்மையில் அவர் அமெரிக்கா சென்று கூட்டங்களை நடத்தி இருந்தார். அதிகமான மக்கள் அதற்கு வந்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து ஐக்கிய மக்கள் சக்தியும் ஹர்சன ராஜகருணாவை அமெரிக்கவுக்கு அனுப்பி அவர்களின் கட்சிக் கூட்டத்தை நடத்தியது.

ஆனால்,அனுரவின் கூட்டத்துக்கு வந்ததுபோல் அதிகமானவர்கள் இவரது கூட்டத்துக்கு வரவில்லையாம்.இதனால் கவலையில் உள்ளதாம் அந்தக் கட்சி.

## என்ன பேசினாங்களோ ...!!!

ரொஷான் ரணசிங்கவை அமைச்சுப் பதவியில் இருந்து விளக்கிய மறுநாள் அவர் நாடாளுமன்றில் சிறப்புரிமை பிரச்சினை ஒன்றைக் கிளப்பி உரையாற்றினார்.

உரையாற்றி முடிந்ததும் நாடாளுமன்றில் உள்ள அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் அலுவலகத்துக்குச் சென்றார்.

அங்கு அமைச்சர் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டிருந்தார்.ரொஷானைக் கண்டதும் கூட்டத்தை இடையில் நிறுத்திவிட்டு தனி அறை ஒன்றுக்குள் ரோஸானை அழைத்துச் சென்று 30 நிமிடங்கள் அவருடன் பேசினார்.

அதில் அவர்கள் இருவரும் மட்டுமே கலந்துகொண்டதால் அங்கு பேசப்பட்ட விடயங்கள் எதுவும் வெளியே வரவில்லை.

# நிர்வாகக் குழு உறுப்பினராக அருணி

Sunshine Holdings PLC, அதன் பணிப்பாளர் சபையில் புதிய உறுப்பினராக அருணி குணதிலக்கவை நியமித்துள்ளது. உலகளாவிய நிதிச் சந்தைகளில் 25 வருடங்களுக்கும் மேலான அனுபவத்துடன், ஆளுமை, நிறுவன இடர் முகாமைத்துவம், உள்ளக கணக்காய்வு மற்றும் கடன் பகுப்பாய்வு ஆகியவற்றில் குணதிலக்க நிபுணத்துவம் பெற்றுள்ளார்.



சிங்கப்பூர் மற்றும் இலங்கையில் உள்ள உலகளாவிய மற்றும் உள்ளூர் வங்கிகளிலும், சிங்கப்பூரின் ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் வங்கியுடன் தனது கடன் மற்றும் உள் தணிக்கைப் பதவியில் பல புவியியல் பகுதிகளிலும் சிரேஷ்ட பதவிகளில் பணியாற்றியுள்ளார்.

ஜூன் 9, 2023 வரை, இலங்கையில் பட்டியலிடப்பட்ட ஒரு பெரிய வங்கிக் குழுமத்தின் தலைவராக குணதிலக பணியாற்றினார். அவரது தலைமையின் கீழ், வங்கி பொருளாதார மற்றும் நிதி நெருக்கடியை வெற்றிகரமாக வழிநடத்தியது.

அவரது ஈர்க்கக்கூடிய வாழ்க்கையில் பல முக்கிய பொது மற்றும் தனியார் நிறுவனங்களின் குழுமத்தின் பணிப்பாளராக பணியாற்றினார். அவர் ஆகஸ்ட் 2020 முதல் நவம்பர் 2021 வரை Sunshine Holdings PLCஇல் குழுப் பணிப்பாளராகப் பதவி வகித்து, நிறுவனத்தின் வளர்ச்சி மற்றும் வெற்றிக்கான தனது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தினார்.

அவரது நிதி நிபுணத்துவம் தவிர, குணதிலக்க உலகளாவிய கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளார் மற்றும் பலதரப்பட்ட பங்குதாரர்களுடன் ஒத்துழைத்து செயல்படுவதிலும் சிறந்தவர் ஆவார்.

குணதிலக கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டப் பிரிவில் பட்டம் (Honors) மற்றும் ஹார்வர்ட் பல்கலைக்கழகம், கேம்பிரிட்ஜ், MA இல் சட்ட முதுகலைப் பட்டம் பெற்றுள்ளார்.

# இலங்கை ஃபைனான்ஸ் ஹவுஸ் சங்கத்தின் வருடாந்த விளையாட்டு விழா




இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனங்களை உள்ளடக்கிய இலங்கை ஃபைனான்ஸ் ஹவுஸ் சங்கம் (The Finance Houses Association of Sri Lanka -FHAS), வருடாந்த விளையாட்டு விழா 11வது முறையாக கொழும்பு-7 புளூம்ஃபீல்ட் மைதானத்தில் பிரமாண்டமான முறையில் நடைபெற்றது.இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட 28 நிதி நிறுவனங்கள் இந்த விளையாட்டில் கலந்து கொண்டன.

2019க்குப் பிறகு ஏற்பட்ட கோவிட் தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக, மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இந்த விளையாட்டு விழா பிரமாண்டமான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டது.

குஉயு போட்டித் தொடரின் ஒட்டுமொத்த வெற்றிக் கேடயத்தை LOLC 275 புள்ளிகளுடன் வென்றது. 225 புள்ளிகளைப் பெற்ற கொமர்ஷல் கிரெடிட் நிறுவனம் இரண்டாவது இடத்தையும், 175 புள்ளிகளைப் பெற்ற சிட்டிசன் டெவலப்மெண்ட் ஃபைனான்ஸ் நிறுவனம் மூன்றாம் இடத்தையும் பெற்றன.

விளையாட்டுப் போட்டியின் ஆடவர் கிரிக்கட் கிண்ணத்தை எல்.பி. பினான்ஸ் அணியும், பெண்களுக்கான கிண்ணத்தை சியப்பத பினான்ஸ் அணியும் வென்றன. போட்டியின் கைப்பந்து சாம்பியன்ஷிப்பை கொமர்ஷல் கிரெடிட் மற்றும் வலைப்பந்து சாம்பியன்ஷிப்பை CDB வென்றது.

கொமர்ஷல் கிரெடிட் கம்பனியைப் பிரதிநிதித்துவப்படுத்திய திரு. பி.எச்.தினேஷ் இலங்கை ஃபைனான்ஸ் ஹவுஸின் இளவரசராகவும், எச்.என்.பி ஃபினான்ஸ் பி.எல்.சியின் சச்சினி குணசேகர இலங்கை ஃபைனான்ஸ் ஹவுஸின் இளவரசியாகவும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 'HELIOS' அறிமுகம்



உயலடநலள குழுமத்தின் டிரான்ஸ்போர்ட் மற்றும் லாஜிஸ்டிக்ஸ் (Transport & Logistic) பிரிவான Hayleys Advantis Limited, குழுமத்தின் ESG பயணத்தில் ஒரு முக்கிய படியான 'HELIOS' எனப் பொருத்தமான வகையில் பெயரிடப்பட்ட அதன் சூழல், சமூக, ஆளுகை (ESG) மூலோபாயத்தை அறிமுகப்படுத்தி ஒரு முக்கியமான படியை முன்னெடுத்துள்ளது.

இந்த அறிமுக நிகழ்வில் கௌரவ அதிதிகளாக, சுற்றாடல் அமைச்சின் செயலாளரும் இலங்கை காலநிலை நிதியத்தின் தலைவருமான கலாநிதி அனில் ஜாசிங்க மற்றும் விசேட பேச்சாளரான, இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் நீர்வாழ் உயிரினங்கள் மற்றும் கடற்றொழில் பிரிவின் தலைவர் பேராசிரியர் செவ்வந்தி ஜயக்கொடி உள்ளிட்ட கௌரவ பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

'HELIOS' என்ற பெயரானது, சூரியனைக் குறிக்கும் கிரேக்க வார்த்தையிலிருந்து உருவாக்கப்பட்டுள்ளது. அனைத்து வகையான உயிரினங்களுக்கும் அவற்றின் நிலைபேறான தன்மைக்கும் சக்தி மூலமாக காணப்படும் மையப் பாத்திரமான சூரியனை அது வலியுறுத்துகிறது.

நுளபு மூலோபாயம் ஏழு அடிப்படைத் தூண்களில் நிறுவப்பட்டுள்ளது:

அவை சக்தி, உமிழ்வுகள், உயிர்ப் பல்வகைமை, ஊழியர் ஈடுபாடு, சமூக ஈடுபாடு, பாதுகாப்பு மற்றும் ஆளுகை. இந்த தூண்கள், சூழல் தொடர்பான பொறுப்பாளர் எனும் வகையில், பொறுப்பான பெருநிறுவன நடத்தைக்கான இக்குழுமத்தின் உறுதிப்பாட்டின் அத்திவார கற்களாகும். Hayleys Lifecode என குறிப்பிடப்படும் அதன் தாய் நிறுவனமான Hayleys PLC இன் ESG கட்டமைப்பின் மூலம் இது வழிநடத்தப்படுகின்றது.

ESG மூலோபாயத்தை அறிமுகப்படுத்தியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய யுனஎயவெளை குழுமத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ருவன் வைத்தியரத்ன, "HELIOS ஆனது மிகவும் நிலைபேறான எதிர்காலத்திற்கான எமது வலுவான அர்ப்பணிப்பை உள்ளடக்கியுள்ளதோடு, Advantis குழுமத்தின் உறுதிப்பாட்டை அது பிரதிபலிக்கிறது." என்றார்.

# தனது 6 மில்லியனாவது புதிய ஆற்றல் வாகனத்தை உருவாக்கும் BYD



சீனாவின் ஷென்ஜெனில் நவம்பர் 24ஆம் திகதி அன்று, உலகின் முன்னணி புதிய ஆற்றல் வாகனங்கள் மற்றும் மின்சார பெட்டரிகள் தயாரிப்பாளரான BYD, அதன் 6 மில்லியனாவது புதிய ஆற்றல் வாகனத்தை Zhengzhou தொழிற்சாலையில் உற்பத்தி செய்து ஒரு வரலாற்று மைல்கல்லை எட்டியுள்ளது.

அத்தகைய மைல்கல்லை எட்டிய உலகின் முதல் நிறுவனமாக தன்னை நிலை நிறுத்தியுள்ள இந்த சாதனை, மின்சார வாகனத் துறையில் முன்னோடியாக முன்னேறுவதற்கு டீலுனு இன் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

வெறும் மூன்று மாதங்களில் 5 மில்லியனில் இருந்து 6 மில்லியனுக்கும் அதிகமான புதிய ஆற்றல் வாகனத்தை தாண்டிய நிலையில், BYD இன் துரிதமான வேக உற்பத்தி மற்றும் விற்பனையில் புதிய அளவை நிர்ணயித்துள்ளது.

BYD இன் தொழில்முறை தனிப்பயனாக்கப்பட்ட துணை பிராண்டான FANGCHENGBAO இன் கீழ் Super Hybrid hardcore SUVMd BAO 5 என பெயரிடப்பட்ட 6 மில்லியனாவது புதிய ஆற்றல் வாகனத்தை உருவாக்கியுள்ளதுடன், இந்த குறிப்பிடத்தக்க சாதனையின் மகிழ்ச்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அதன் ஊழியர்களுடன் பகிர்ந்து கொள்வதற்காக விசேட நிகழ்வொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் மிகப் பெரிய பட்டியலிடப்பட்ட கூட்டு நிறுவனமான John Keells Holdings PLC (JKH) உடனான BYD இன் மிக சமீபத்திய கூட்டு உடன்படிக்கையின் பின்னணியில், பொருளாதாரத்தின் புதிய சகாப்தத்தில் புதிய ஆற்றல் வாகனங்களை (NEV) வழங்குவதற்கு இந்த குறிப்பிடத்தக்க மைல்கல் ஒத்துழைப்பாக அமைந்துள்ளது.

இது இலங்கை சந்தைக்கான பொருளாதார, சுற்றுச் சூழல் உணர்வுள்ள முன்னேற்றத் தீர்வுகளின் புதிய சகாப்தத்தை அறிமுகப்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

# Green X Talks கலந்துரையாடல்

நெகிழ்ச்சியான மற்றும் உறுதியான தங்கள் கதைகளைப் பகிர்ந்து கொண்ட முன்மாதிரியாளர்கள் டிசம்பர் 03 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் சர்வதேச மாற்றுத்திறனாளிகளுக்கான தினத்தைக் குறிக்கும் வகையில், அதானி குழுமம் Green X Talks கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்தது.



இந்நிகழ்வில் மாற்றுத்திறனாளிகள், பல்வேறு தடைகளை வென்ற மாற்றுத் திறனாளிகள், நெகிழ்ச்சியான மற்றும் அர்ப்பணிப்புடனான தங்கள் வாழ்க்கைக் கதைகளைப் பகிர்ந்து கொண்டனர்.

கடந்த டிசம்பர் 04 ஆம் திகதி Adani Corporate House இல் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், அசாத்தியமான விடயங்களை தங்கள் சொந்த வழிகளில் மீளமைத்து, சாத்தியமற்றதை சாத்தியமாக்கிய ஊக்கமளிக்கும் ஆளுமைகளை முன்னிறுத்தினர்.

அதானி குழுமத்தின் Airport Business பணிப்பாளர் ஜீத் அதானி இங்கு தெரிவிக்கையில், "Green X ஆனது மாற்றுத்திறனாளிகளின் பரந்த திறனை குறிக்கிறது. பச்சை நிறம் வாழ்க்கை நிறைந்த உலகத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதோடு, வளர்ச்சி, நம்பிக்கை, முடிவற்ற சாத்தியக்கூறுகளை குறிக்கிறது. X என்பது மர்மத்தைக் குறிக்கிறது. என்றார்.

2016 முதல் இந்திய ஆடவர் கட்புலனற்ற கிரிக்கெட் அணியின் தலைவரான அஜய் குமார் ரெட்டி இந்நிகழ்வில் தனது கதையை கூறியிருந்தவர்களில் ஒருவராவார். அவர், 2017 கட்புலனற்றோர் ரி20 உலகக் கிண்ணம் மற்றும் 2018 கட்புலனற்றோர் உலகக் கிண்ணங்களை வென்ற அணிக்கு அவர் தலைவராக இருந்தார்.

# சவூதியில் நடைபெற்ற உலக இ-விளையாட்டுக்கள் சம்பியன்ஷிப் வெற்றிகரமாக நிறைவு

## உலகின் முதல் இ-விளையாட்டுத்தளம் அறிமுகம்





(காலித் ரிஸ்வான்)

உலக இ-விளையாட்டுக்கள் சாம்பியன்ஷிப் (GEG) என்பது உலக இ-விளையாட்டுக்கள் பெடரேஷனினால் நடாத்தப்படும் குறிப்பிடத்தக்க ஒரு போட்டி நிகழ்வாகும். இந்த நிகழ்வு இவ்வருடம் சவூதி அரேபியாவின் ரியாத் நகரில் டிசம்பர் 12 முதல் 16 வரை நடைபெற்றது. இந்நிகழ்வின் போது பலவிதமான இ-விளையாட்டுக்கள் அரங்கேற்றப்பட்டதோடு இந்தப் போட்டிகளில் காணப்பட்ட வினைத்திறன் மற்றும் குதூகலம் மிக்க கொண்டாட்டங்கள் மூலம் இ-விளையாட்டுக்களுக்கு உலகத்தார் மத்தியிலுள்ள வரவேற்பானது எடுத்துக்காட்டப்பட்டது. சவுதி eLeague தலைமையகத்தில் நடைபெற்ற இப்போட்டியில் 50 க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து 250 க்கும் மேற்பட்ட வீரர்கள் கலந்துகொண்டனர்.

புதுபு சாம்பியன்ஷிப் 2023 நிகழ்வில், சமகால நவீன தொழில்நுட்ப முன்னேற்றங்களிற்கமைய, பாரம்பரிய விளையாட்டுகளை இ-விளையாட்டுடன் ஒன்றிக்கும் வகையில் அமைந்த விளையாட்டுக்களே அரங்கேற்றப்பட்டன. மேலும் இது #worldconnected என்ற ஹேஷ்டேக்கின் கீழ் நடைபெற்றதோடு சிறந்த சமூக கேமிங், பொழுதுபோக்கு மற்றும் கலாச்சார அனுபவங்களை வழங்கியதாக பலராலும் போற்றப்பட்டது. "Dota 2," "eFootballTM 2024," "PUBG MOBILE," மற்றும் "Street Fighter 6" போன்ற பிரபலமான இ-விளையாட்டுக்கள் இந்நிகழ்வில் அரங்கேற்றப்பட்டன.

உலக இ-விளையாட்டுக்கள் சாம்பியன்ஷிப்பில் சுவாரஷ்யமான போட்டிகளை கண்டுகலிப்பதிலும் விளையாடுவதிலும் ஆர்வம் காட்டும் இ-விளையாட்டுப் பிரியர்கள் மற்றும் ஏனைய ரசிகர்களை ஈர்ப்பதில் சவூதி இ-விளையாட்டுக்கள் சாம்பியன்ஷிப் நிகழ்வானது கனகட்சிதமாக செயற்பட்டது என சவூதி இ-விளையாட்டுக்கள் பெடரேஷன் தலைமை நிர்வாக அதிகாரி துர்கி அல்-ஃபவ்ஸான் நம்பிக்கை தெரிவித்தார். அத்தோடு இந்த இ-விளையாட்டுத் துறையில் ஆர்வமுள்ளவர்களது புத்தாக்க சிந்தனையை இந்நிகழ்வானது மேம்படுத்தும் என்பதோடு அந்நாட்டு பொருளாதார, பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டுத் துறைக்கும் பாரிய நன்மை பயக்கும் என்ற எதிர்பார்ப்புடனே நடாத்தப்பட்டதோடு இந்த எதிர்பார்ப்பு பூர்த்தியாகியும் உள்ளது.

இந்தப் போட்டிகளின் நிறைவாக உலகில் முதல் இ-விளையாட்டுக்களுக்கான தனியான தளத்தை சவூதி அரேபியாவின் கித்தியா நிறுவியுள்ளது. இது இ-விளையாட்டுக்கள் மற்றும் உலக கேமிங் துறையில் சவூதி அரேபியாவின் உயர்ஸ்தானத்தை பறைசாற்றுவதோடு அத்துறையை வளர்ப்பதற்கான சவூதியின் அர்ப்பனிப்பையும் எடுத்துக்காட்டுகிறது. அத்தோடு இவ் விளையாட்டுத் தலமானது அதி நவீன இ-விளையாட்டுக்களுக்கான சாதனங்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளதோடு விளையாட்டு அரங்கங்கள், சொகுசுத் தங்குமிட வசதிகள் அத்தோடு ஆடம்பர ஹோட்டல்களையும் அடக்கியே இவ்விடமானது அமைக்கப்பட்டுள்ளது. இது 2030 ஆகும் போது வருடாந்தம் 10 மில்லியன் பார்வையாளர்களை ஈரக்கும் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது.

# சுகாதார சேவைகளை மேம்படுத்த நடவடிக்கை



ஹேமாஸ் ஹொஸ்பிட்டல்ஸ், வெள்ளவத்தையின் மையப்பகுதியில் சுகாதாரப் பராமரிப்பிற்கான நிகரற்ற புகலிடத்தை ஸ்தாபிப்பதற்காக மெடி கிளினிக் (பிரைவேட்) லிமிட்டெட் உடன் கைகோர்த்து, அனைத்தையும் முற்றிலும் மாற்றியமைக்கும் வலுகொண்ட முயற்சியில் கால்பதித்துள்ளது.

இந்த முக்கிய கூட்டாண்மையானது விரிவான மருத்துவ சேவையின் புதிய சகாப்தத்தை வெளிப்படுத்துவதுடன், சமூகத்தின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒரே கூரையின் கீழ் பலதரப்பட்ட சேவைகளை நெறிப்படுத்துகிறது.

அனைத்து சேவைகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளக்கூடிய கோட்பாட்டின் கீழ், தலைசிறந்த சுகாதார சேவைகளை வழங்குவதற்கான அவர்களின் ஓயாத அர்ப்பணிப்பில், ஹேமாஸ் ஹொஸ்பிட்டல்ஸ் மற்றும் மெடி கிளினிக் இணைந்து மருத்துவ நிபுணத்துவம், அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் கனிவான பராமரிப்பு ஆகியவற்றின் இனிமையான கலவையை உருவாக்கியுள்ளன.

வெள்ளவத்தை மற்றும் அதைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் உள்ள நோயாளர்கள் பரந்த அளவிலான சுகாதார சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும் என்பதை இந்த ஒத்துழைப்பானது உறுதி செய்வதுடன், இவை அனைத்தும் ஒரே இடத்தில் அமையப்பெற்றுள்ள

அதிநவீன சேவை மையத்தில் சௌகரியமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இங்கு மேன்மை என்பதே விதிமுறை மற்றும் சௌகரியத்திற்கே அதிகூடிய முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

# டீலர் கன்வென்ஷன்-2023

இலங்கையின் முதன்மையான உள்நாட்டில் தயாரிக்கபடும் ஆண்களுக்கான பிரசித்தி பெற்ற வரத்தக நாமமான சிக்னேச்சர், அண்மையில் தனது "சிக்னேச்சர் டீலர் கன்வென்ஷன் 2023" ஐ Galle Face Hotel இல் நடத்தியது.



இந்த மாநாடு அதன் டீலர்களுடனான நீடித்த வணிக கூட்டாண்மைக்கு இதயபூர்வமான நன்றியைத் தெரிவிப்பதாக அமைந்திருந்தது.

சிக்னேச்சரின் அண்மைய சேகரிப்புகள் மற்றும் இலங்கையின் முதல் மொத்த விற்பனை செயலியின் அறிமுகம், வர்த்தக நாமத்தின் நம்பகமான டீலர்களின் விலைமதிப்பற்ற பங்களிப்பை அங்கீகரிக்கும் ஒரு அற்புதமான நடவடிக்கையாக அமைந்திருந்தது.

மாலையில் பிரதம விருந்தினராக ட்ரீம்ரான் குழும நிறுவனங்களின் குழும முகாமைத்துவ பணிப்பாளர்/தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர் கி/ கோமஸ் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் ஹமீடியா குழுமத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் பௌசுல் ஹமீட், ஹமீடியா குழுமத்தின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் ஹுசைன் சாதிக் மற்றும் சிக்னேச்சர் மற்றும் ஹமீடியா ஊழியர்களும் கலந்துகொண்டனர்.

இலங்கை முழுவதும் பரவியுள்ள 300 விநியோகஸ்தர்களின் வலையமைப்பிலிருந்து, 90 பேர் கௌரவிப்புக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர், மேலும் சிறந்த 25 பேர் அவர்களின் சிறப்பான செயல்திறன் மற்றும் சிக்னேச்சருடனான நீடித்த கூட்டாண்மைக்காக விருதுகளைப் பெற்றனர்.

# Microsoft Imagine Cup 2024




தூர நோக்குடைய மாணவர் தொழில்முயற்சியாளர்களுக்கு Microsoft AI தொழில்நுட்பத்தை பயன்படுத்தி புத்தாக்கமான தீர்வுகளை வழங்கக்கூடிய சர்வதேச ரீதியிலான தொழில்நுட்பத் திறன் காண் போட்டியான Microsoft Imagine Cup, 2024 ஆம் ஆண்டுக்காக இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

Microsoft Imagine Cup தற்போது 22 ஆவது ஆண்டாக ஏற்பாடு செய்யப்படுகின்றது. தற்போதைய உள்நாட்டு மற்றும் சர்வதேச பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு தொழில்நுட்ப ரீதியான தீர்வுகளை கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பை வழங்கும் வகையில் இந்தப் போட்டி அமைந்துள்ளதுடன், இந்த ஆண்டு AI இல் புதுப்பிக்கப்பட்ட நோக்கத்தைக் கொண்டிருக்கும்.

இந்தப் போட்டியில் பங்கேற்பதனூடாக மாணவர்களுக்கு, USD 1,000 Azure Credits மற்றும் USD 2,500 OpenAI Credits ஆகியவற்றுடன், நிபுணர்களின் வழிகாட்டல்களைப் பெற்று நவீன AI தொழில்நுட்பத்தை அணுகும் வாய்ப்பு கிடைப்பதுடன், தமது AI பயணத்தை துரிதப்படுத்திக் கொள்ள முடியும்.






# முப்பது வருட நிறைவில் Neptune Recyclers

இலங்கையில் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவு முகாமைத்துவ துறையில் உள்ள முன்னணி நிறுவனமான நேிவரநெ சுநஉலஉடநசள நிறுவனம், அதன் 30ஆவது ஆண்டு நிறைவை 2023 நவம்பர் 14ஆம் திகதி, அதன் களஞ்சிய வளாகத்தில் கொண்டாடியது.

நுஓியஉம ஊழசசரபயவநன ஊயசவழளெ்டுஊ இன் துணை நிறுவனமும், பெருமைக்குரிய யுடிநசனநநஉ உழடனளைபெள புசழரி இன் ஒரு அங்கமாக இயங்கி வரும் நேிவரநெ சுநஉலஉடநசள ஆனது, பசுமை மற்றும் அதிக சூழல் உணர்வுள்ள, இலங்கைக்கு சாதகமான மாற்றங்களை உருவாக்குவதற்கும் நிலைபேறான தீர்வுகளை வழங்குவதற்கும் உறுதிபூண்டுள்ள நிறுவனமாகும்.

முகாமைத்துவ பணிப்பாளர் அப்துல்லாஹ் காசிம், நிறைவேற்றுப் பணிப்பாளர் றிஸான் ஜஃபர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி பஸ்லீன் மஜீத் ஆகியோரின் தூரநோக்கு கொண்ட தலைமைத்துவ குழுவின் வழிகாட்டலின் கீழ், தொழில்துறைத் தரங்களை நிர்ணயித்தவாறு, பிராந்தியத்தில் சூழலை பொறுப்பாக பேணும் ஒரு நிறுவனமாக இது விளங்குவதோடு, வட்டப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் நிறுவனம் தன்னை அர்ப்பணித்துள்ளது.

அவர்களது வர்த்தகநாம மீள்நிலைப்படுத்தல் முயற்சிகளின் ஒரு அங்கமாக, "இலங்கையின் வட்டப் பொருளாதாரத்தை முன் கொண்டு செல்லுதல்" எனும் ஒரு புதிய வாசகத்தை நேிவரநெ சுநஉலஉடநசள ஏற்றுள்ளது.

இது இலங்கையின் வட்டப் பொருளாதாரம் மீதான அவர்களது மேம்படுத்தப்பட்ட கவனத்தையும், வட்டப் பொருளாதாரத்தில் அவர்களது அனைத்து பங்குதாரர்களிடையேயும் பகிரப்பட்ட மதிப்பை உருவாக்கும் அதே வேளையில், நாட்டிற்கு மிக நிலைபேறான எதிர்காலத்தை உருவாக்குவதில் வழிவகுக்கும் அவர்களது அர்ப்பணிப்பையும் பிரதிபலிக்கிறது.

# Coca-Cola மற்றும் Sathosa இணைவு புதுப்பிப்பு




இலங்கை முழுவதும் Coca-Cola தயாரிப்புகளின் கிடைக்கும் தன்மை மற்றும் அணுமுறையை மேம்படுத்தும் ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக, Coca-Cola Beverages Sri Lanka (CCCBSL) மற்றும் Lanka Sathosa Limited ஆகியவை அக்டோபர் 30, 2023 முதல் தங்களது கூட்டாண்மையை புதுப்பித்துள்ளது.

Sathosaவின் பரந்த வலையமைப்பான 430+ நாடு முழுவதிலுமுள்ள விற்பனை நிலையங்களில் பல்வேறு வகையான Coca-Cola தயாரிப்புகள் கிடைப்பதை இந்த கூட்டாண்மை உறுதி செய்கிறது.

இந்த கூட்டாண்மை புதுப்பிப்பதற்கான கையொப்பமிடும் நிகழ்வில் Coca-Cola Beverages Sri Lanka (CCBSL) மற்றும் Sathosa Lanka Limited ஆகிய இரு நிறுவனங்களின் முக்கிய பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.இது புதுப்பிக்கப்பட்ட கூட்டாண்மையின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

CCBSLI பிரதிநிதித்துவப்படுத்தி முகாமைத்துவ பணிப்பாளர் – Pradeep Pandey, பணிப்பாளர் நிதி – Rajeev Tandon, வர்த்தக பணிப்பாளர் – Prashant Kumar, முக்கிய கணக்குகள் மற்றும் நவீன வர்த்தகம், றுளு ரூ ஞழரவாநசல சுநபழைல தலைவர் – Tania Karunaratne, முக்கிய கணக்கு முகாமையாளர் – Chamil De Silva மற்றும் உதவி வர்த்தக சந்தைப்படுத்தல் முகாமையாளர் – Oshani Ganegoda. Sathosa நிறுவனத்தின் தலைவர் Pasanda Yapa Abeywardena, பிரதம நிறைவேற்று அதிகாரி Sampath Senawatte, பிரதிப் பொது முகாமையாளர் கொள்வனவு – Roshari Sahajeewani மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் நிதி – Channa Kevitiyagala ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பண்டிகைக் கால சலுகைகளுடன் மக்கள் வங்கியின் கடனட்டை




தேசத்தின் பெருமையான மக்கள் வங்கி, தனது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் வெகுமதியளிக்கும் வகையில், பீப்பிள்ஸ் கடனட்டைகளில் பல்வகைப்பட்ட சலுகைகள் மற்றும் இலகு தவணைக் கொடுப்பனவுத் திட்டங்களை வழங்கி, இந்த பண்டிகைக்கால உற்சாகத்தை மேம்படுத்தியுள்ளது.

பீப்பிள்ஸ் கடனட்டைதாரர்கள் தற்போது முன்னணி ஹோட்டல்கள் மற்றும் உல்லாச விடுதிகள், உணவகங்கள், சுப்பர்மார்க்கெட்டுக்கள், மோட்டார்வாகன சேவை மையங்கள், வைத்தியசாலைகள், ஒன்லைன் விற்பனை மையங்கள், உடற்பயிற்சி மையங்கள் மற்றும் புத்தகங்கள், ஆடையணிகள், பாதணிகள், தோல் உற்பத்திப் பொருட்கள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், இலத்திரனியல் பொருட்கள் மற்றும் ஆபரணம் போன்ற வாழ்க்கைமுறைப் பொருட்களின் பல்வகைப்பட்ட தெரிவுகளை வழங்கும் பல்வேறுபட்ட விற்பனை மையங்களில் 75% வரை கணிசமான தள்ளுபடிகளைப் பெற்று அனுபவிக்க முடியும்.

மேலும், தெரிவு செய்யப்பட்ட விற்பனை மையங்களில் 24 மாதங்கள் வரையான வட்டியில்லா, இலகு தவணைக் கொடுப்பனவுத் திட்டங்களின் பயன்களையும் அவர்கள் பெற்றுக்கொள்ள முடியும்.




# Signfluencer அறிமுகம்

செவித்திறன் குறைபாடுள்ள நபர்களை ஆதரிப்பதற்கும் சைகை மொழிக்கான அங்கீகாரத்திற்குமான மாற்றத்தை கொண்டுவருவதில் சமூக வலைத்தளங்களின் ஆற்றலை உள்ளடக்குகிறது

செலான் வங்கி, சைகை மொழிக்கான அங்கீகாரத்தை பரிந்துரைப்பதுடன் சமூக வலைத்தளங்களில் அவர்களின் திறனை வெளிப்படுத்தும் வாய்ப்பை உருவாக்கி அச்சமூகத்தை ஆதரிக்கும் நோக்கில் இலங்கையின் முதல் 'Signfluencer' ஐ அறிமுகப்படுத்தியது..

செலான் வங்கியின் Signfluencer campaign, செவித்திறன் குறைபாடுள்ள சமூகத்தை அங்கீகரிப்பதுடன் அவர்களின் தேவைகளைப் புரிந்துகொள்ள பயனுள்ள தகவல்தொடர்பு வழிகளை வழங்குவதன் அவசியத்தின் மீது விழிப்புணர்வை உருவாக்குகிறது.

இந்த முக்கிய சமூகத்திற்கு சிறப்பான சேவை அளிப்பதற்கு மேலதிகமாக அவர்களின் வாழ்வில் சாதகமான மாற்றத்தைக் கொண்டுவந்து நிதி சம்பந்தமான நடவடிக்கைகளில் பங்குபற்றுதலுக்கான தடைகளை நீக்கி, வங்கிச் சேவையை உள்ளடக்கியதாக மாற்றுவதே செலான் வங்கியின் நோக்கமாகும்.

இலங்கையின் சனத்தொகையில் 9%, அதாவது 1.9 மில்லியனுக்கு சமனான அல்லது 55 பேரில் ஒருவர், ஏதாவது ஒரு வகையான செவிப்புலன் கோளாறால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் ஆய்வு சுட்டிக்காட்டுகிறது.